நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 187/2021
எதிரி தரப்புக்காக எ. சா.1 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி என்கிற மணிகண்டன் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |

1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of March 2026.

**<u>2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் முதல் விசாரணை</u>–**

(ஆரம்பிக்கப்பட்ட நேரம் 04.45 )

நான் தற்போது பண்ருட்டியில் நல்லான் தெருவில் குடியிருக்கிறேன். நான் பிளம்மிங் ஹார்டுவேர்ஸ் கடை வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.2 பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை நான் 06.06.2021 ஆம் தேதி எங்கள் வீட்டு வாசலில் வைத்து போட்டேன். என்னுடன் குப்புசாமி என்பவரும் கையெழுத்து போட்டார். நான் கையெழுத்து போடும்போது அந்த ஆவணத்தில் திருத்தங்கள் இல்லை. குப்புசாமி என்பவர் எங்கள் தெருவைச் சேர்ந்தவர். இந்த ஆவணத்தை போலிசார் அங்கு வந்து மேப் போட்டு அதன்பின்னர் எழுதினார்கள். அந்த ஆவணத்தில் நான் படிக்காமல் கையெழுத்து போட்டேன். போலிசார் எழுதிய பிறகு நான் கையெழுத்து போட்டேன்.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1–வது எதிரி ஏழுமலை என்கிற ஜெயமணி எங்கள் எதிர் வீட்டை சேர்ந்தவர் என்றால் சரிதான். பாரதி என்ற பெண் 1–ம் எதிரியின் மனைவி என்றால் சரிதான். ஆஜர் முதலாவது எதிரியின் மனைவி பாரதி புகார் கொடுத்தது சம்மந்தமாக போலிசார் ஏழுமலை என்கிற ஜெயமணியின் வீட்டின் முன்பு விசாரணை செய்து படம் வரைந்தார்கள் அதற்கு சாட்சியாக நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.2 போலிசார் வந்து விசாரணை செய்து படம் வரைந்தது சம்மந்தமாக போலிசார் அந்த ஆவணத்தில் எழுதியுள்ளோம் என்ற விவரத்தை சொல்லி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். நானும் குப்புசாமி என்பவரும் தான் அந்த ஆவணத்தில் கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். போலிசார் என்னை அன்று விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 04.54 )

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.